**உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு செயற்பாட்டுத் திட்டத்தைத் துரிதப்படுத்தல் செயற்திட்டம் - 2018**

---

உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு செயற்பாட்டுத் திட்டத்தைத் துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதற் கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 17 ஆம் திகதிய 6026 எல்கே ஆம் இலக்க நிதி உடன்படிக்கையுடனும் 8743 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09(பீ) உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் மற்றும் நிதி உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய உயர் கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சும் தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு நிறைவேற்று முகவராவதுடன் 15 பல்கலைக்கழகங்களும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகமுமே அமுலாக்கல் முகவராக உள்ளன. முன்னுரிமைப் பிரிவுகளில் சேர்வதை அதிகரித்தல், பட்டப் படிப்புத் திட்டத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் உயர் கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். பொருளாதார அபிவிருத்திக்கான முன்னுரிமைப் பிரிவுகளின் உயர் கல்வியில் சேர்வதை அதிகரித்தல், உயர் கல்வித் தரத்தை அதிகரித்தல், ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் கண்டுபிடிப்புகள் மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் கண்காணிப்பு உதவிகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அலுலாக்கப்படுகின்றன. கடன் மற்றும் நிதி உடன்படிக்கைகளின் கீழ் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,500 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினாலும் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியாலும் உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக்கூற்றுக்கள் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயற்பாடு அலகுகளில் | எய்தப்பட்ட செயற்பாடு | தாமதம் | தாக்கம் | தாக்கங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| உயர் கல்வி தர மேம்பாடு | (அ) வளப்படுத்தல், கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீடு மற்றும் ஆங்கில மொழி திறன் ஊக்குவிப்பு | முதற்சுற்றின் கீழ் பல்கலைக்கழகங்களின் 10 பீடங்களிற்கு மானியங்கள் வழங்கப்பட உள்ளன. | மானியங்கள் வழங்கப்படவில்லை | 12 மாதங்கள் | செயற்திட்டத்தின் கால நீடிப்பு | அபிவிருத்தி வழிகாட்டல்கள் மற்றும் திட்ட மீளாய்வு போன்ற ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட நேரம். |
| | (ஆ) கல்விசார் பதவியணியினருக்கான பட்டப் பின்படிப்புப் பட்டம் | 2018 – 2020 ஆம் ஆண்டின் போது ஆகக் குறைந்தது 200 கல்விசார் பதவியணியினருக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட வேண்டும் | 14 புலமைப்பரிசில்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. | - | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் எய்தப்படாதிருக்கலாம். | 2018 ஆம் ஆண்டின் போது இரு தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களிற்கு கற்கைகளை ஆரம்பிப்பதற்காக 06 மாதங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அத்தியாவசிய செயல்முறைகளைக் கடைப்பிடிப்பதால், 2018 ஆம் ஆண்டின் போது நிதி உதவி வழங்கப்பட முடியாதுபோயிற்று.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** நடவடிக்கைகளைத் துரிதப்படுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| விநியோக இணைப்புப் பெறுபேற்றைச் சரிபார்ப்பதற்கு மூன்றாம் தரப்பு நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | மூன்றாம் தரப்பின் சான்றுறுதிப்படுத்தல் இன்றி சர்வதேச அபிவிருத்திச் சங்கம் கடன் தவணைப்பணத்தை விடுவிப்பதில்லை. | அடுத்த ஆண்டில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டச் செயற்பாட்டுக் கையேட்டின் படி, சுயாதீனமான மூன்றாம் தரப்பு ஒன்று நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 வெளிக்களப் பயணங்களில் இருந்தான அவதானிப்புகள்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 2018 இல் 16 தேசிய பல்கலைக்கழகங்களிற்கு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத்துறைகளில் செயற்திட்டம் ரூபா 528.10 மில்லியன் தொகையை செலவிட்டுள்ளது. எவ்வாறெனினும், ரூபா 57.29 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம் களனிப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகத்தில் 05 மாதங்களிற்கு மேலாக குறித்த | குறித்த நோக்கங்கள் எய்தப்பட முடியாது. | பிரச்சனை உடனடியாக அறியப்பட்டு இந் நிலையை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நோக்கங்களிற்காக சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாதிருந்தது. மேலும், கொழும்புப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிப் பாடசாலைக்கு ரூபா 86.10 மில்லியன் தொகை அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 குறைந்த பயன்பாட்டுடனான மூலவளங்கள்

| | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கடன் வழங்கும் நிறுவகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட ரூபா **7,803.05** மில்லியன் தொகையில் இருந்து ரூபா **7,765.89** மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37.16 மில்லியன் தொகையான மிகுதித் தொகை இலங்கை மத்திய வங்கியின் விசேட (டொலர்) கணக்குகளில் செலவிடப்படாதிருந்ததுடன் ஏனைய மிகுதித் தொகையான ரூபா 178.79 மில்லியன் செயற்திட்ட நடைமுறைக் கணக்குகளில் 04 மாதங்களிற்கு மேலாகக் காணப்பட்டன. | விரைவின்றி வழங்கப்படுவதனால் ரூபா 31.86 மில்லியன் தொகையான உறுதிப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளது. | முதலாம் ஆண்டான 2018 ஒப்பீட்டளவில் குறைவானதுடன் வழங்கப்படாத கடன் மீதிக்காக உறுதிப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியிருந்து. | தாமதமான நடவடிக்கைகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இச் செயற்திட்டம் 15 தேசிய பல்கலைக்கழகங்களிற்கு ரூபா 847.10 மில்லியன் தொகையை முழுமுற்பணமாக அனுப்பியிருந்த போதிலும் அதில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 287.69 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 559.41 மில்லியன் தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த பல்கலைக்கழகங்களின் நடைமுறைக்கணக்குகளில் 04 மாதங்களிற்கு மேலாக செலவிடப்படாதிருந்தது. | செயற்திட்ட அலுவலகத்தின் செயற்பாடுகள் 2018 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவுகளைத் துரிதப்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்களிற்கு 2018 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதியை விடுவிப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | பல்கலைக்கழக மட்டங்களில் தவிர்க்கப்பட முடியாத தாமதங்கள் மற்றும் 2018 இன் இறுதிக் காலாண்டின் போதான நாணயப் பரிமாற்றல் தளம்பல்கள் உயர்ந்த அளவில் காணப்பட்டமையால் கொள்வனவு நடைமுறையில் தாக்கம் ஏற்பட்டிருந்தது. | கொள்வனவு நடைமுறைகளைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | ரூபா 20 மில்லியன் கூட்டுத்தொகையான மானியங்கள் 2018 ஆகஸ்ட் மாதம் வணிக இணைப்புக் கலங்களை நிறுவுவதற்காக 05 பல்கலைக்கழகங்களிற்குவிடுவிக்கப்பட்டிருந்தன. | நடவடிக்கைகளை அமுலாக்கத்தில் தாமதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. | தற்போது 07 பல்கலைக்கழகங்கள் வணிக இணைப்புக் கலங்களை ஏற்கனவே நிறுவியுள்ளன. | தாமதமான நடவடிக்கைகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |